# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 12 NOVEMBER 01, 2002 பாலம் 21




வெளிவந்துவிட்டது

உலகத் தமிழோசை

புரியாத கணக்கு

காலாண்டு சஞ்சிகை இதழ் 2

தமிழ் வர்த்தக நிலையங்களில் அமோகமாக விற்பனையாகின்றது.


தீபாவளி வாழ்த்துக்கள்

அன்பர்கள், நண்பர்கள், விளம்பரதாரர்கள் யாவருக்கும் மனம் நிறைந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

- விளம்பரம் பப்ளிகேஷன்ஸ்








வீடு விற்க, வாங்க...

**Raja M. Mahendran, P. Eng.**

(Sales Rep.)

**Office: 416.491.4002 Pager: 416.589.4270**

இன்றைய சேவையே நாளைய வெற்றி!

## Singapore Communication

Only $30.00/M
- Reliable & Friendly Service
- 50 mins day time Free
- Evenings & Weekend Free
- Every Day (12 noon-1p.m) Free
- c/w, c/c, v/m free
- Add.Daytime min 0.30ctsonly

**Unlimited Tallking* $50.00 /m**
- u/L Incoming call 500 mins outgoing*
- Up to $150.00 Hardware rebate in store

**Store: 416-740-5292**

Buy One Cell Accessories & Get Second One ½ Price

**Inventory (Final) Clearance Sale! Start: August 1st, 02**

5010 Steeles Ave. W., Unit 17ABC - Kipling & Steeles



## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

**ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்**

திங்கள் - வியாழன் காலை 7am-2pm, மாலை 5pm - 9pm

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416-754-7338 / 416-724-7480**

3011 Markham Road (North of Mcnicoll Ave.) Unit 62 & 63

## துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

**416.267.8221**



## Insurance & Financial Services

**Balan Kanapathi (Agent)**

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel+ Business

LIBERTY MUTUAL London Life

**•416.321.1515 •905.294.2429**

4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)


# அறிவும் ஆக்கமும் 113

## விஜய குலத்துங்கம்



இதுவரையிலும் மற்றைய கிரகங்களில் நீர் இருப்பதாக சான்றுகள் இல்லை. ஆனால் தற்போது கிடைத்திருக்கும் சில தகவல்களின்படி மற்றைய கிரகங்களின் சந்திரன்களில் நீர் இருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றது. எப்படி பூமிக்கு ஒரு சந்திரன் இருக்கின்றதோ, அதைப் போல மற்றைய கிரகங்களுக்கும் சந்திரன்கள் உண்டு. இந்த சந்திரன்களில் நீர் இருப்பதாக சான்றுகள் கிடைத்திருப்பதால் கொள்கை அடிப்படையில் சில சந்திரன்களில் உயிரினங்கள் கூட வாழலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.


முன்னர் Jupiter - வியாழன் கிரகத்தினை சுற்றிவரும் சந்திரன்களான Ganymede, Europa, Callisto ஆகிய கிரகங்களிலேயே உயிரினங்கள் இருப்பதாகக் கூறப்பட்டது. இந்த சந்திரன்களின் பனிக்கட்டியாக இருக்கும் மேற்பரப்பின் கீழாக கடல் இருக்கும் எனக் கூறப்பட்டது. ஆனால் அண்மையில் வெளிவிடப்பட்ட சில தகவல்களின் படி வியாழனின் சந்திரன்களில் மாத்திரமல்ல, சனிக் கிரகத்தை சுற்றிவரும் சந்தினான Titan இலும், Neptune கிரகத்தின் ஆகப் பெரிய சந்திரனான Triton இலும், சிறிய சந்திரனான Rheaஇன் மேற்பரப்பின் கீழே சமுத்திரங்கள் இருப்பதாக்க் கூறப்படுகின்றது. இவற்றைவிட Uranus கிரகத்தைச் சுற்றும் Titania என்ற சந்திரனிலும் Oberon என்ற சந்திரனிலும், Neptune, Pluto ஆகியவற்றிற்கு அப்பாலுள்ள 2001ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட Varuna இலும் நீர் இருக்கலாம் - என சந்தேகிக்கப்படுகின்றது.



இவற்றுள் முக்கியமாக வியாழனின் சந்திரனான Europa இலேயே அனைவரது கவனமும் திரும்பியுள்ளது. ஒப்பீட்டளவில் Europa இன் பணிக்கட்டி மேற்பரப்பின் தடிப்பு மிகவும் குறைவாக உள்ளது. அத்துடன் Galileo விண்கலம் எடுத்த படங்களில் இருந்து பனிக்கட்டிப் பரப்பில் வெடிப்புகளும், இடைவெளிகளும் காணப்படுகின்றன. அமெரிக்காவிலுள்ள University of Arizona வைச் சேர்ந்த Dr. Richard Greenberg என்பவரும் அவரது உதவியாளர்களும் இந்தப் பனிக்கட்டி வெடிப்புகளை ஆராய்ந்த பின்னர் Europa இன் சமுத்திரங்கள் பூமியின் ஆர்ட்டிக் சமுத்திரத்தை ஒத்ததாக உள்ளது எனக் கூறியுள்ளார்கள். ஆர்ட்டிக் சமுத்திரமானது பனிக்கட்டியினால் மூடப்பட்டிருந்தாலும், பனிக்கட்டி வெடித்தும் பிளவுபட்டும் உள்ளதால் சுற்றாடலிலுள்ள வளிமண்டலத்துடன் தொடர்பு பட்டுள்ளது. இதைவிட கோடை காலத்தில் பனிக்கட்டி உருகுகின்றது இதைப்போலவே Europa இன் கடலும் பனிக்கட்டி வெடிப்பூடாக வளிமண்டலத்துடன் தொடர்பு கொண்டிருப்பதால் அங்கும் உயிர்கள் தோன்றி கூர்ப்படைந்திருக்க சாத்தியக் கூறுகள் இருப்பதாக கூறப்படுகின்றது.

இதைவிட வியாழனின் மற்றொரு சந்தரனான IOஇல் எரிமலைகள் நிறைய உண்டு. அதிலிருந்து வெளிப்படும் கந்தக வாயுவினது EUROPA வரை சென்று கடலுடன் சேர்க்கக் கூடியதாக உள்ளதால் உயிரினங்கள் தோன்றும் வாய்ப்பும் அதிகமாவுள்ளது. Europa எனும் சந்தரனானது வியாழனில் இருந்து 6,70,900 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. இதனது விட்டம் 3,138 கிலோமீற்றர் ஆகும். இது silicate பாறைகளால் ஆனது. இதன் பனிக்கட்டித் தடிப்பு குறைந்ததாகவும், நடுப்பகுதி உலோகத் தன்மை கொண்டதாக உள்ளது.

சூரிய குடும்பத்தின் ஏனைய கிரகங்களையும், சந்திரன்களையும் விட Europa இன் மேற்பரப்பு



கரடுமுரடாக இல்லாமல் அழுத்தமாக உள்ளது. இதில் Crater எனப்படும் பாரிய குழிகள் மிகவும் குறைவாக உள்ளது. 5 கிலோமீற்றர் விட்டத்திற்கு கூடுதலான குழிகள் 3 மாத்திரமே உள்ளன. பூமியின் சந்திரனுடன் ஒப்பிடுகையில் வயது குறைந்ததாக, அதாவது அதைவிட அண்மையில் தோன்றிய ஒன்றாகக் கருதப்படுகின்றது. Europa இன் ஒரு பகுதியினை Galileo விண்கலத்தினால் தெளிவாக படம் பிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் படங்களை பார்க்கும் போது பூமியின் பனிக்கட்டியால் மூடப்பட்ட வட,தென் துருவங்கிளான arctic, antarctic பகுதிகளைப் போன்று உள்ளது. Europa இன் மேற்பிரப்பிலுள்ள வெடிப்புகள் சில 20 கிலோமீற்றர் வரை நீளமாக உள்ளன. இவை ஒரு காலத்தில் நடந்த தொடர்ச்சியான எரிமலை வெடிப்பினால் உருவாகியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இதைவிட இதன் வளிமண்டலத்தில் ஒக்சிஜனும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. சூரிய குடும்பத்தில் காணப்படும் 61 சந்திரன்களில் Ganymede, Titan, Triton மற்றும் Europa ஆகியவற்றிலேயே வளிமண்டலம் காணப்படுகின்றது.

மற்றைய சந்திரன்களில் இருக்கும் பனிக்கட்டிக்கு கீழான சமுத்திரங்களின் இயல்புகளை ஊகித்தறிவதற்காக, ஏறக்குறைய அதே அமைப்புடைய, பூமியின் அன்டார்ட்டிக் பகுதியிலுள்ள Vostok என்ற ஏரியை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றார்கள். இந்த வொஸ்ரொக் ஏரியானது 4 கிலோமீற்றர் தடிப்பான பனிக்கட்டியின் கீழே உள்ளது. அன்டார்ட்டிக் பகுதியிலுள்ள 70 ஏரிகளில் ஆகப்பெரிய ஏரியான Vostok, ஒன்ராரியோ ஏரியின் அளவு கொண்டது. சிலரின் கருப்படி 30 - 40 மில்லியன் வருடங்களுக்கு முன்னால் பனிக்கட்டியினால் மூடப்பட்டு சுற்றியுள்ள உயிர்ப்பான சுற்றாடலில் இருந்து வேறுபட்டு பிரிந்தது. சாதாரண வளிமண்டலத்துடன் மிக நீண்ட காலம் தொடர்பற்று இருந்ததால், இந்த 30 - 40 மில்லியன் வருட காலங்களுள் இந்த சூழ்நிலைக்கேற்ப புதுவகையான முற்றிலும் வேறுபட்ட உயிரினங்கள் வேறுபட்ட கூர்ப்புப் பாதை மூலம் தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

British Antarctic Survey என்ற நிறுவனத்தைச் சேர்ந்த Dr. Cynan Ellis Evans என்பவர் கருத்துத் தெரிவிக்கும் போது, வெந்நீர் ஊற்றுக்கள், நச்சுத் தன்மையான சூழ்நிலைகளிலும் கூட நுண்ணுயிர்கள் வாழ்கின்றபடியால், கூடிய அமுக்கம் குளிர் வெப்பநிலைகளிலும் கூட உயிரினங்கள் வாழலாம் எனக் கூறியுள்ளார். ஆபிரிக்காவில் உள்ள சில எரிகள் போன்று, இந்த Vostok ஏரியும், நிலப்பகுதி பிரிந்து சென்றபோது ஏற்பட்ட பெரிய இடைவெளியில் நீர் நிறைந்ததன் மூலம் உருவாகி இருக்கலாம். மலைகள் நிறைந்ததாகவும் கரைகளில் எரிமலைகள் கூட காணப்படலாம். எனவே அடிப் பகுதியில் வெப்பம் கூடிய நிலையும் இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. இதனால் அந்த ஏரியின் அடியில் முன்பு என்றுமே காணப்படாத உயிரினங்கள் காணப்படலாம் என பூகோள ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள்.

1998ஆம் ஆண்டு ரஷ்ய விஞ்ஞானிகள் 3,623 மீற்றர் வரை பனிக்கட்டியில் துளையிட்டு ஆராய்ந்தார்கள். ஆனால் துளையிடும் முயற்சி கீழேயுள்ள நிலப்பரப்பிற்கு 120 மீற்றர் மேலாக நிறுத்தப்பட்டது. உள்ளேயிருக்கும் நீர் வெளியில் உள்ளவற்றால் மாசடையக் கூடாதென்ற காரணத்தாலேயே நிறுத்தப்பட்டது. நீர்ப் பரப்பிற்கு மேலாக உள்ள பனிக்கட்டியிலும் கூட 200,000 வருடங்களுக்கு முன்னர் தோன்றிய பக்டீரியாக்களும், பங்கசுக்களும் காணப்பட்டன. நீருக்குள் சென்றால் மேலும் விருத்தியடைந்த உயிரினங்கள் காணப்படாலம் என நம்பப்படுகின்றது. எனவே இதைப் போன்று மற்றைய கிரகங்களின் சந்திரன்களிலும் கூட உயிரினங்கள் என ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமானது ஒரு Robot ஒன்றை Europa இற்கு அனுப்பி பனிக்கட்டியை துளைத்து ஆராய்ச்சிகளைச் செய்ய முயற்சிகளை எடுத்து வருகின்றது.

* * * *

விஜே குலத்துங்கத்தின் தயாரிப்பில் நடக்கும் விஞ்ஞான நிகழ்ச்சியான "விஞ்ஞானமும் நாமும்" என்ற நிகழ்ச்சியை இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறை TVI தொலைக்காட்சியில் திங்கள் இரவு 9:30 இற்கு பார்க்கலாம்.

* * * * *

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijeyalku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.


நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?



கவலையை விடுங்கள்

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற

**Vitaplex**

சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.



Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra

கிடைக்கும் இடங்கள்

ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாகா எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.




**ACTION HONDA**

புதிய பழைய HONDA, VOLVO மற்றும் CHRYSLER வாகனங்களை ஈழத்தமிழ் மகன் சோதீஸ் இடம் பெறும்போது




எங்கும் கிடைக்காத குறைந்த விலை
I will beat any price
ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
Life time Oil change
சிறந்த நேர்மையான சேவை
Best Service





Call me Now!! 416-704-1179

Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough



# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

Ontario's Drive Clean
Accredited Test & Repair Facility




Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


## அருள் விருந்து

- செ. சிவசுப்பிரமணியம்

* மனதின் நடுநிலை தற்செயலாய் வருவதன்று. தன்னைத் தானே வெல்லுவதினின்று மனதின் நடுநிலை வருகிறது.
* பக்தி புலி போன்றது. புலி உயிர்களைக் கொல்லுகிறது; பக்தியோ தீய எண்ணங்களைக் செ . அல்லும் பகலும் பக்தி பண்ணு.
* கெட்ட வழியில் செல்லும் மனதைக் காட்டிலும் கொடிய பகை எவருமில்லை. மனதை வெல்லுதலே கடவுளுக்கு நாம் செய்யும் வணக்கமாகும்.
* மேகத்தினின்று விடுபட்ட நிலா உலகுக்கு வெளிச்சம் தருகிறது. தீமையினின்று விடுபட்ட மனிதன் உலகுக்கு நல்வாழ்வைக் காட்டித் தருகிறான்.
* அச்சம் ஆக்கத்துக்கு உரியதல்ல.
* தூய்மையே தெய்வத் தன்மை என்று சொல்லப்படுகிறது.
* உண்மையான தொண்டினின்று உனக்கு ஆற்றப் அனைத்தும் வருகிறது.
* பெரியது என்றும் சிறியது என்றும் வேற்றுமை பாராட்டாது இருப்பவன் தீரன். ஏனென்றால் அவன் பரிபூரணத்தில் நிலைத்திருக்கின்றான்.
*கல்வியில்லது போய்விடுவது. மனிதனுக்குப் பெரிய நஷ்டமாகாது. பக்தியில்லாது போய்விட்டால் அது பெரு கஷ்டமாகும்.
* ஆலயங்களை மனிதன் பாழ்படுத்தவும் வல்லவன், தூயவைகளாக்கவும் வல்லவன். நீ தூயவனாயிரு.
* தன் வாயின்று இரத்தம் சொட்டச் சொட்ட ஒட்டகம் முள்செடியையே திண்கிறது. அங்ஙனம் உலகப் பற்றுடையவர் இன்பம் போன்று தென்படும் துன்பங்களை ஈடுபடுகின்றனர்.
* தான் இல்லாது போய்விட்டால் உலகுக்குப் பெரு நஷ்டமாகுமென்று அறிவிலி எண்ணுகிறான். ஒருவனை எதிர்பார்த்து உலகில் இன்னொருவன் வாழ்ந்திருக்கிறான் அல்லன்.



# தமிழர் நிர்வாகத்தில் ஒரு

# EMBASSY


தீபாவளியை முன்னிட்டு விசேட விலைகளில்
OCTOBER 10,2002 - NOVEMBER 10, 2002
பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

Sale

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944
5 SAMOSA - $1.00



Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield, 5200 Finch Ave., Sacarborough

416-332-8451

# கனடிய பாடசாலை - கல்வித்திட்டம்
# EDUCATIONAL INFORMATION



புதிய பழைய கல்வித்திட்ட மாணவர்களது ஒன்றிணைவு பற்றி மேலும் கவனிக்கையில் மாணவர்கள் மேலும் சிக்கல்களை எதிர் நோக்க வேண்டி உள்ளது. இரண்டு கல்வித் திட்ட மாணவர்கள் போட்டியிடும் இவ்வேளை அதிக அளவு சிறப்புப் புள்ளிகள் பெறக் கூடிய மாணவர்கள் என்று பார்த்தால் பழைய கல்வித் திட்டத்தில் இருக்கும், அதே வேளை இவ்வருடம் இரண்டாம் முறையாக எத்தனிக்கும் கணிதம், பொறியியல், இரசாயனம் முதலிய பாடங்களை எடுப்பவர்களே ஆவர். ஆகவே புதிய கல்வித் திட்டத்தில் இருக்கும் மாணவர்களோ, அல்லது முதன் முறையாக பழைய கல்வித் திட்டத்தில் இருக்கும் மாணவர்களோ இவர்களோடு ஒப்பிடுகையில் பெரும்பாலானோர் பின்தங்கும் நிலையிலேயே இருக்கின்றனர். மாணவர்கள் இவ்வாறு பல்வேறு நிலையில் காணப்படுகையில் பல்கலைக்கழக அனுமதி எவருக்கு என்ற கேள்விக்குறி மாணவர்களிடமும் அவர்களது பெற்றோரிடத்திலும் காணப்படுவது நியாயமானதாகப்படுகிறது. இதில் இன்னோர் விடயமும் கவனிக்க வேண்டியுள்ளது. பாடசாலைக்குப் பாடசாலை,



நகரத்திற்கு நகரம் மாணவர்களது பாடத் திட்டங்கள் ஒன்றாக இருந்தாலும் அவர்களது தகுதி வேறு பட்டுக் காணப் படுகின்றது. ஏனெனில் அத்தியாயப் பரீட்சைகள், இறுதிப்பரீட்சைகள் போன்றவை அப்பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களைப் பொறுத்தே உள்ளது. இவ்விடயத்தில் றிச்மண்ட்ஹில், மார்க்கம் போன்ற பகுதிகளில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் சற்று கடினமானதாகவே காணப்படுன்றன.

இதுமட்டும் அல்ல புதிய கல்வித்திட்டத்தில் calculus (நுண்கணிதம்) பாடத்திற்காக வெளியிடப்பட்ட இரு வேறுபட்ட நூல் வெளியீட்டாளர்களில் Harcourt நிறுவனத்தால் வெளியிடப்பட்ட Advanced function & Interdictory Calculus என்ற பாடநூலானது சற்று இலகுவாக இருப்பதாகக் காணப்படுகிறது. இந்நூலை பழைய கல்வித் திட்டத்தில் பயன்படுத்தும் Holt, Rinehart and Winston of Canada Limited இனால் வெளியிட்ட Calculus நூலானது சற்று ஆழமானதும் மிகுந்த தரமுள்ள வினாக்களையும் கொண்டுள்ளது.

இவ்விரு வேறுபட்ட மாணவர்களது தரத்தினை எந்தெந்த நிலையில் வைக்கப்போகிறது என்பது பல்கலைக்கழகத்தில் தான் எதிரொலிக்கப் போகிறது. அதுவரைக்கும் இவ்விரு மாணவர்களும் வேறுபட்ட நிலையில் தற்சமயம் கல்விச் சீரற்ற நிலையாகும். இது ஒரு சிலரைப் பாதிக்கவே செய்யும். ஆயினும் பழைய, புதிய கல்வித் திட்ட மாணவர்களை வேறு வேறு

**சர்மா (சரவணபவ சர்மா)**

நிலையில் கணிப்பீடு செய்வதும், நகரங்களின் அடிப்படையில், குறிப்பிட்ட பாடசாலைகளின் அடிப்படையில் கணிப்பீடுகள் செய்வதும் ஒரு சில கண்ணோட்டங்களாக பல்கலைக்கழக தேர்வுக் குழுவினரால் நிகழும் என்பதை மாணவர்கள் கவனிக்க வேண்டும்.

ஆகவே இவ் வருடம் இந்த இரு துறை மாணவர்கள் ஒன்றிணையும் சம்பவம் ஒரு விசித்திரமாகவே இருக்கப் போகிறது என்பதனை அறிந்து மாணவர்கள் தத்தம் குறிக்கோளை மேலும் செம்மைப் படுத்துவதே முக்கிய விடயமாகும்.

இவ்வாறு குறிப்பிட்ட மாணவர்கள் தமது துறையினையும் தாம் விரும்பும் பல்கலைக் கழகத்தையும் தேர்வு செய்த பின்பு அத்துறைக்கு அவர்கள் சராசரியாக எடுக்க வேண்டிய புள்ளி விபரங்கள் INFO Issue 63, 2002 இல் வெளியாகியுள்ளது. எனவே இப்புள்ளி அடிப்படையில் எவ்வளவு தூரம் மாணவர்கள் தமது திறனை உயர்த்த வேண்டும் என்று ஒரு குறிக்கோளை ஏற்படுத்துவது மாணவர்களிற்கு பெரிதும் துணைபுரியும் என்று நம்புகிறேன்.

இந்த INFO சஞ்சிகையினை பெறாத மாணவர்கள் (519) - 823-1940 என்ற இலக்கத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்பதனையும் இதிலே குறிப்பிட்டு இந்தக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.


# கலைமகள் புத்தக நிலையம்

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST. , TORONTO, ONT.
(416) 921-5018



# CANADIAN SCHOLARSHIP TRUST PLAN

* Depository — The Royal Bank
* Trustee — The Royal Trust
* President — John Kearns
* Enrolment Director — Bruce Winsor
* Representative — Valepuram Gugan



Valepuram Gugan

- கனடாவில் 1960ஆம் ஆண்டு முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமும்
- இலாப நோக்கமற்ற RESP நிறுவனமும்
- இன்றுவரை $1Billion முதலும் புலமைப் பரிசாகவும் வழங்கிய நிறுவனமும்
- நான்கு வருடங்களுக்கு புலமைப் பரிசு வழங்கும் நிறுவனமும் ஆகிய CSTஇல் இணைந்து அரசாங்கம் வழங்கும் 20% நன்கொடைப் பணத்தையும் பெற்று உங்கள் மழலைகளின் கல்விச் செல்வத்தை மேம்படுத்த பல நற்திட்டங்களை உள்ளடக்கி மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனமாகிய

**Canadian Scholarship Trust Plan**
இல் இன்றே இணைந்து கொள்ளுங்கள்.

"நமது இனம் தலைநிமிர்ந்து வாழவேண்டுமேயானால் நமது மழலைகளின் கல்விச் செல்வம் பாதுகாக்கப்பட வேண்டும்"

வல்லிபுரம் குகன்

☎: 416-838-4856/416-297-850


## கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் பத்தாவது ஆண்டினை முன்னிட்டு நடத்தும் சிறுகதை, கவிதைப் போட்டிகள்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், தனது பத்தாவது ஆண்டினை முன்னிட்டு இலக்கியப் போட்டிகளை நடத்தி பணப் பரிசுகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

புலம்பெயர்ந்த நாடுகளில் வசிக்கும் தமிழ் எழுத்தாளர்கள் கலந்து கொள்ளும் சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி ஆகியன நடத்தப்படுகின்றன. கனடா தமிழ் எழுத்தாளர் இணைய அங்கத்தவர்கள் இதில் கலந்து கொள்ள முடியாது.

சிறுகதைகள், அச்சடித்த பக்கங்களாயின், ஆறு (06) பக்கத்துக்கு மேற்படாமலும், கையெழுத்தாயின் பத்து (10) பக்கங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

கவிதைகள், மரபுக் கவிதைகளாயின் நாற்பது (40) அடிகளுக்கு மேற்படாமலும் புதுக் கவிதைகளாயின் ஐம்பது (50) வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

அனைத்துப் படைப்புகளும், ஏற்கனவே வெளியிடப்படாதவைகளாக இருக்க வேண்டும். படைப்புகளைப் போட்டிக்கு அனுப்புகையில், எழுத்தாளரின் முழுப் பெயர், புனைபெயர் (இருப்பின்), தபால் முகவரி (ஆங்கிலத்தில் ), தொலைபேசி இலக்கம் ஆகியவை தனியான ஒரு தாளில் எழுதி, படைப்புடன் இணைத்து அனுப்ப வேண்டும். படைப்பின் எந்தப் பக்கத்திலும் மேற்சொன்ன விவரங்களை எழுதக் கூடாது.

சிறுகதை, கவிதைப் போட்டிகள் ஒவ்வொன்றுக்கும் பரிசுகள் பின்வருமாறு அமையும்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | - | கனடிய டாலர்கள் 300 |
| இரண்டாம் பரிசு | - | கனடிய டாலர்கள் 225 |
| மூன்றாம் பரிசு | - | கனடிய டாலர்கள் 150 |

2003 ஜனவரி 15 வியாழக் கிழமைக்கு முன்னராக படைப்புகள் கிடைக்க வேண்டும். மூலப் பிரதிகளை மட்டுமே அனுப்ப வேண்டும். பாக்ஸில் அனுப்ப முடியாது. போட்டி தொடர்பான எந்தத் தொடர்புகளும் ஏற்கப்பட மாட்டாது. போட்டி நடுவர்களுடன் இணைந்ததாக் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முடிவே இறுதியனது. படைப்புகளைப் போட்டிக்கு அனுப்ப வேண்டிய முகவரி: CTWA,
47 Thornecliffe Park Dr. Unit 204
Toronto, Ont. M4H 1J5, Canada

2003 நடுப்பகுதியில் கனடாவில் நடைபெறும் பத்தாவது ஆண்டு விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

# விண்வெளி


112

கனி




## நட்சத்திரங்கள்

நட்சத்திரங்களின் வலிமையான ஈர்ப்புப்புலம் காரணமாக ஒளியானது நட்சத்திரங்களை அண்மித்துச் செல்கையில் பாதை விலகல் அடைகின்றது எனப் பார்த்தோம் அல்லவா! அதன் விளைவு என்னவென்று இனிப் பார்ப்போம். மிகத் தொலைதூரத்தில் உள்ள நட்சத்திரம் ஒன்று நமது கண்களை அடைவதற்குள் வேறு பல நட்சத்திரங்களைக் கடந்து வந்திருக்கும். அவற்றில் சிலவற்றிற்கோ அல்லது ஒன்றிற்கோ மிக அண்மையாக அ[illegible]ாளி பயணப்பட்டிருக்கும். அவ்விதம் அ[illegible]மையாக வருகையில் அவ் ஒளியின்



பாதைவிலகல் அடைந்தருக்கலாம். அப்படி இருக்குமாயின் இரவில் நாம் காணும் அந்த நட்சத்திரத்தின் நிலையானது வேறுபட்டுக் காணப்படும். அதாவது நமது கண்களுக்குத் தெரியும் நட்சத்திரத்தின் உண்மையான நிலை அதுவல்ல. அவ்விடத்தில் நட்சத்திரம் எதுவும் இல்லை. வேறு ஒரு இடத்திலேயே - சில மில்லியன்கள் ஒளியாண்டு தூர வேறுபாட்டிலே கூட - உண்மையான நட்சத்திரம் இருக்கும். இதற்குக் காரணம் இடையில் இருக்கும் சில நட்சத்திரங்கள் ஒளியின் பாதையை விலகல் அடையச் செய்வதால் ஆகும். இதனைக் கீழே உள்ள விளக்கப் படம் மூலம் தெளிவாகப் பார்க்கலாம்.





x என்ற நட்சத்திரத்தில் இருந்து வரும் ஒளியானது A என்ற நட்சத்திரத்தின் வலிமையான ஈர்ப்புப் புலத்தால் வளைவுறுகின்றது. ஒவ் ஒளியானது பூமியில் உள்ள P என்பவருக்கு தெரிகின்றது. நாம் ஒளியானது நேர்ப்பாதையிலேயே வருகின்றது என உணருவதால் P என்பவருக்கு X என்ற நட்சத்திரத்தின் ஒளி Y இல் இருந்து வருவது போல் தோன்றும். எனவே P என்பவர் Y இல் தான் நட்சத்திரம் உள்ளது என எண்ணுகின்றார். ஆக Pஇன் கண்களுக்குத் தெரியும் அந்த நட்சத்திரம் உண்மையில் அவ்விடத்திலில்லை. வேறு ஏதோ ஒரு இடத்தில் இருந்து அது உண்மையில் ஒளிர்கின்றது. எல்லா நட்சத்திரங்களுமே இப்படித் தோன்றுவதில்லை. சில நட்சத்திரங்கள் மாத்திரம், அவற்றின் ஒளி வேறு ஒரு நட்சத்திரத்தின் அருகாமையில் வரும் போது இது நிகழ்கின்றது.

இது வரையில் நாம் அறிந்து கொண்டவையில் இருந்து, இரவில் விண்வெளியை அழகுபடுத்தும், கவிஞர்களின் கற்பனை வளத்தை தூண்டிவிடும். நட்சத்திரங்கள் உண்மையிலே கண்சிமிட்டுவதில்லை. மிகத் தொலைவில் இருக்கும் அவற்றின் தோற்றம் கூட இன்று உள்ள தோற்றமில்லை; மேலும் சில நட்சத்திரங்கள் உண்மையில் அவ் விடத்திலேயே இல்லை. ஆக உண்மையில் நாம் காணும் இந்த நட்சத்திரங்களின் தோற்றம் எல்லாமே...நான் கூறவில்லை! நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். (இந்த முடிவாவனது விண்தாரகைகளுக்கு மட்டுமல்ல; நாம் காணும் கூறும் எல்லா தாரகைகளுக்கும் - நட்சத்திரங்களுக்கும் பொருந்தும்).

இவை எல்லாம் நட்சத்திரங்கள் பற்றிய ஒரு அறிமுகம் மட்டுமே. இனிவரும் நாட்களில் இந்த நட்சத்திரங்கள் பற்றி மேலும் விரிவாக, சற்றுக் கிட்டவாகச் சென்று பார்ப்போம். அதற்கு முதல் இரவில் வானில் தெரியும் நட்சத்திரங்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள். இந்த நட்சத்திரங்களை எவ்வளவு என எண்ண முடியாதுவிடினும் அவற்றைப் பற்றிச் சில விடயங்களை இலகுவில் நாம் கூறிவிட முடியும். சில நட்சத்திரங்கள் மிகச் சிறியனவாகத் தெரிகின்றன. வேறு சில நட்சத்திரங்கள் சற்றுப் பெரியனவாகத் தெரிகின்றன. மேலும் சில நட்சத்திரங்கள் மெல்லிய நீல நிறத்திலும் வேறு சில நட்சத்திரங்கள் மஞ்சள் நிறத்திலும் காணப்படுகின்றன. இவற்றை எல்லாம் இலகுவிலேயே நாம் பிரித்துக் கண்டு கொண்டு விடுவோம். அல்லவா! இது தான் நடத்திரங்களின் அடுத்த பகுதி.


# யோகா சோதிடம்



- ❈ கிரகப் பொருத்தம் பார்த்தல்
- ❈ சுபமுகூர்த்தம் கணித்தல்
- ❈ சாதகக் குறிப்புக் கணித்தல்
- ❈ பலன் பார்த்தல்

**416-299-8361**


### மரணம்

ஜீவித வாசலின் கதவடைப்பு!
சுவாசத்தொழிற்சாலையின் மூடுவிழா!
வயதெல்லையின்றி யாவருக்கும் கிடைக்கும் சமவுரிமை!
வாழ்க்கைத் திரைப்படத்தின் வணக்கம்!
இலஞ்சம் கொடுத்து தப்பிக்க இயலா உறுதியான தண்டனை!
பின்போட முடியா கட்டாயப் பரீட்சை!
துப்பாக்கி அறுவடை செய்யும் சமகலாப் பயிர்!
கடவுள் விளையாடும் கிரிக்கெட் விளையாட்டில்
எடுக்கப்படும் உயிர் விக்கெட்டு!
வழித்துணையும் வாழ்க்கைத் துணையும் விழித்துணையும்
விட்டு விட்டு விதித் துணையோடு
போகின்ற தனிப்பயணம்!

- மோகனதாஸ் சிவஞானம்


# J DAYCARE



- * மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
- * ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
- * காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
- * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
- * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

**1 Hr. - $3.00**
**Day - $15.00**
**Week - $60.00**

**தினசரி நடவடிக்கைகள்**

* உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு:
Mrs.S.J. சௌந்தரநாயகம்

151 Lamareaux Dr., TownHouse 99A (Finch / Birchmount) **416-502-3033**



# YARLCAN
## STEAM CLEANING

உங்கள்
சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்-



* DUCT CLEANING

* CARPET CLEANING

மோகன்: (905) 887-7436 Cell: (416) 721-9709




**கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்**

## விருது பெற்ற

# VIVEKA
## PRINTERS

**உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும்**



**முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்**

**80 BARBADOS BLVD.,**
**UNIT #4 SCAR., ONT.**

# 416-410-6401

# சிந்திப்போம் - செயற்படுவோம்

அறிவுக்கு முதன்மை கொடுக்கும் சமூகமாக இல்லாது, உணர்ச்சிகளுக்கு முதன்மையளிக்கும் சமூகமாகவே தமிழ்ச் சமூகம் தனது கடந்த காலங்களைப் பெரிதும் கழித்து வந்துள்ளது. இந்நிலை மாறவேண்டும் அறிவுக்கு முதலிடம் தரவேண்டும்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்ற வள்ளுவன் வாய்மொழியை நாம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். மெய்ப்பொருள் காண்பது **'அரிதாக'** இல்லாது, மெய்ப்பொருள் காண்பது **'அறிவாக'** அமையவேண்டும்.

*ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி*
*அலையும் அறிவிலிகாள்! - பல்*
*லாயிரம் வேதம் **அறிவொன்றே தெய்வமுன்***
*டாமெனல் கேளீரோ?*

என பாரதியின் முழக்கத்தை கருத்தில் கொள்ளுவோம்.



*தூக்கிய வாளும் தினவெடுத்த தோள்களிலே*
*பூட்டிய ஈட்டியும் மட்டும் போதாது தோழர்களே*
*அறிவென்னும் ஆயுதம் வேண்டும்*
*அறிவாயுதம்! அறிவாயுதம்!*
*அகிலத்தின் அணையாத ஜோதி!*

எனக் கிரேக்க தத்துவப் பேராசான் சோக்கிரட்டீசின் கருத்தை நமது சிந்தையில் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

கடந்த பல தசாப்பதங்களாக எமது தமிழச் சமூகம் வெற்றுக் கோஷங்களுக்கும், வேடதாரிகளுக்கும் ஆட்பட்டு அல்லலுற்றது. உயர்கல்வி கற்று பரம்பரை பேணி, பதவிக்கும், பட்டங்களுக்குமாய் பகட்டுக்காட்டிய சுயநல வாதிகளைப் பகுத்தறிவற்ற ரீதியில் பின்பற்றி அவர்கள் காட்டிய தவறான பாதையில் செம்மறியாட்டு மந்தைகளாய் பின் தொடர்ந்து வந்தது. அதன் பலனை தமிழ்ச் சமூகம் இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றது முதல் இன்று வரை அறுவடை செய்து வருகின்றது. இன்றைய காலகட்டத்தில் புதிய தலைமையின் கீழ், புதியதலைமுறை புத்தெழுச்சி பெற்று இனவிடுதலைக்கான புதிய பாதையில் நடை பயின்று வருகின்றது.

இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள் மட்டுமன்றி தமிழ் சமூகத்திலுள்ள முதியவர்களும், கல்விமான்களும், சமூக சேவகர்களும், ஊடகவியலாளர்களும் பேச்சளவில், எழுத்தளவில் சீர்த்திருத்தக் கருத்துக் கூறாது, புரட்சி பேசாது, நடைமுறையில் செயலில் காட்டி இளம் தமிழ்ச் சமுதாயத்தில் ஒரு சிந்தனைப் புரட்சியை மலரவைக்க வேண்டும்.

பழம் பெருமைகள் பேசுவதில் பயன் இல்லை. 'பழமைகள் எல்லாம் பிற்போக்குமல்ல, புதுமைகள் எல்லாம் முற்போக்குமல்ல" பழமைகளைப் பின்னோக்கிப் பார்த்து அவற்றில் அறிவுக்கும் இக்காலச் சூழ்நிலைக்கும் எமது சமூக முன்னேற்றத்திற்கு விடிவுக்கும் ஏற்றவற்றைத் தெரிந்து பயன்படுத்தி தமிழ் சமூகம் முன்னேற வேண்டிய கடமைப்பாட்டில் இருக்கின்றது.

தமிழில் எல்லாம் உண்டு என்று கர்வப்படுவதை விடுத்து தமிழில் என்ன இல்லை என்பதனை நாம் கணக்குப் பார்க்க வேண்டிய காலட்டத்தில் இருக்கின்றோம். அதுவே தமிழ் சமூகத்தின் இருப்பினை உறுதி செய்வதற்கான வழிமுறையாகும்.

*பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;*
*மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்*
*சொல்வதிலோர் மகிமை இல்லை;*
*திறமான புலமையெனில் வெளிநாட்டோர்*
*அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.*

என்ற பாரதியின் கனவினை நாம் நனவாக்க வேண்டும்.

பகுத்தறிவுக்கு ஒவ்வாத விடயங்களைப் 'பண்பாடு', 'மரபு' என்ற திரைகள் இட்டுத் தமிழச் சமூகத்தில் தேக்க நிலை ஏற்படுத்தாது சீரிய சிந்தனைகளுடன் அறிவு தெளிந்த நீர் அருவியாக பிரவாகித்து ஓட வழி செய்ய வேண்டும்

*'கண்மூடிப் பழக்க வழக்கமெல்லாம்*
*மண்மூடிப் போக வேண்டும் என்று'*

மூன்றாவது மனிதர்களாக நின்று தமிழச் சமூகம் மேடையில் முழங்காது நாமே நமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க முன்வர வேண்டும். தமிழ் சமூகம் பக்த! பக்தி என்று மருள் நீக்கி அருள் பெற இறைவழிபாட்டில் ஈடுபடுவது நல்லவிடயம். ஆனால் பரமனின் பாதார விந்தத்தைப் பற்றிக் கொள்வதற்காக, பகுத்தறிவு அற்ற வகையில் குடங்குடமாக ஆவின் பாலை 'அபிஷேகம்' என்ற பெயரில் சாக்கடையில் ஓடவிடுவது அபத்தம். பாலின்றிப் பசியால் வாடும் இலட்சக்கணக்கான குழந்தைகளின் பசியினைப் போக்க அபிஷேகத்திற்கென வாங்கும் பாலிற்காகச் செலவிடும் பணத்தினைப் பயன்படுத்துவதனையே ஆண்டவன் அகமகிழ்வுடன் ஏற்றுக் கொள்வான். அத்துடன் பாலினை வீண்விரையம் செய்யாது, உயிரினங்களின் பசியினைப் போக்கப் பயன்படுத்துவதே மானிடதர்மம்.

**கதிரவன்**

---

* நட்புக் கொள்ளும் விசயத்தில் அவசரப்படாதீர்கள். நிதானமாக இருங்கள். நட்புக் கொண்ட பின்பு நிலைத்து நிற்க வழி தேடுங்கள். -சாக்ரட்டீஸ்

* உலகில் யாரும் எவையும் தன்னிச்சையாகச் செய்ய விட்டுவிட்டால் பலம் பொருந்தியவர்கள் ஏமாற்றுக்காரர்கள்பாடு வேட்டைதான். -காமராஜர்

* பிள்ளை தேடும் புண்ணியம் பிதாவுக்கும் உண்டு. -வள்ளலார்

* உலகத்தில் எங்கேயாவது ஓரிடத்தில் இருக்கும் வறுமையானது உலகத்தில் எல்லா இடங்களுக்கும் ஆபத்தானது. -கென்னடி

* கற்று மறந்துவிடுவது கல்விக்குக் கேடு ஆகும். அக்கல்வியைத் தகுதி யற்றவனுக்குக் கற்பிப்பது அதைப் பாழ்படுத்துவதாக முடியும். -நபிகள் நாயகம்

* பிறருடைய குறைகளை நாம் சுட்டிக் காட்டும் போது நம்முடைய குறைகளை உலகம் ஆராய ஆரம்பிக்கிறது. -இயேசுநாதர்

* ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும் போது இறைவன் இன்னும் மனிதனைக் கண்டு வெறுப்படைய வில்லை என்ற நல்ல செய்தியையே கொண்டு வருகிறது. -தாகூர்

* புழுக்கள் கூட மிதிபட மிதிபட புலியாக மாறும். -கலைஞர்

* எந்த உலகிலும் நாம் காணும் எல்லா ஆக்க வேலைகளும் மனிதனின் ஊக்கத்திலிருந்து தோன்றியவை. -விவேகானந்தர்

* ஒரு ஆடவனுக்கு கல்வி புகட்டுவது ஒரு தனி மனிதனுக்கு கல்வி புகட்டுவது ஒக்கும். ஒரு பெண்ணுக்கு கல்வி புகட்டுவது ஒரு குடும்பத்தையே கல்வி மயமாக்கும். -லீவர்

* கருணை வழியே சென்றால் உயரிய அனுபவங்களைப் பெறலாம். இறுதியில் உண்மை ஒளியும் கிடைக்கும். -காந்தியடிகள்

* புத்திரச் செல்வம் பெறாதவர் பொருட்செல்வம் பெற்றும் பயனில்லை. -வள்ளலார்

---


14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

(416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 136

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | 2 | 3 |
| | ■ | ■ | ■ | ■ | 4 | ■ | |
| 5 | | | 6 | | ■ | ■ | |
| | ■ | 7 | | ■ | ■ | ■ | |
| | ■ | ■ | ■ | 8 | | | |
| ■ | 9 | | | ■ | | ■ | ■ |
| | ■ | ■ | | ■ | ■ | 10 | |
| 11 | | | 12 | | ■ | | 13 |

**இடமிருந்து - வலம்**

1. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவருக்கு இது செய்தல் ஆகீம்
2. பிரி (வல - இட)
6. மக்கள் கூட்டம் (வல - இட)
7. சமுத்திரம் 8. சாலை
9. பூவில் கட்டுவது
10. பசு 11. பயிர் செய்யப்படாதநிலம்
13. நாய் போல் கத்து (வல - இட)
14. வித்து (வல - இட)
17. மதிப்பு (வல - இட)

**மேலிருந்து - கீழ்**

1. எங்கும் பரந்து இருத்தல்
2. காப்பு 3. பரம்ப[illegible]
4. விடுபடுதல்
5. விலங்கு ஒன்று (கீழ் - மேல்)
9. ஒருபுறமாக சாய்
11. அரிசியில் உள்ளது
12. ஊறு (கீழ் - மேல்)
13. தொகுதி
15. அவசரப்படு (கீழ்- மேல்)
16. கதையுடன் கூடிய செய்யுள் (கீழ் - மேல்)
17. அதிசயி (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வி | ஸ் | வ | நா | த | ன் | ■ | வி |
| யா | ■ | ளை | ■ | லை | மா | ■ | ல |
| ப | ■ | ய | ■ | மு | ■ | ளை | கி |
| க | ட | ல் | ■ | றை | ■ | ■ | டு |
| ம் | ■ | ■ | கா | ■ | ச | ர | ம் |
| ■ | ■ | ஆ | ■ | த | ரி | சு | ■ |
| ரை | கு | ■ | தை | வி | ■ | ■ | கை |
| வி | ழு | க் | கா | டு | ■ | ரு | தி |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் November 27, 2002க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**135இல் வெற்றி பெற்றோர்**
1) M. Kunalan, Toronto, Ont.
2) S. சகிலா, Donmills, Ont.


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.

* வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்த[illegible]

**733 kennedy Road**
**[Ken-Mark Plaza]**


---

* தேவன் தேவியை அடித்ததில்லை இவன் அவளை அடிக்கலாமா?



* வெளிநாடு வந்து தமிழ் படிக்க மறுப்பவர்கள் ஸ்ரீலங்காவிலிருந்து சிங்களம் படித்திருக்கலாமே.

*அற்ப சலுகைகளுக்காக மதம் மாறுபவன் சொற்ப சலுகைகளுக்காக மனைவியை மாற்ற மாட்டானா?

* புகையிலையில் பற்று வைத்தால் அது நெஞ்சில் புற்று வைத்துப் பின்னர் உயிருக்கு முற்று.

-கலகலப்பு தீசன்


**தமிழ் நாட்டில் பிரயாண சேவை**

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 044-621-0294, 98410 - 94459

253 M.T.H. Rd. Asion Garden, #201 Villivakkam, Chennai

### தமிழ் மாணவ மாணவிகளே இச்சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!

### கனடா இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் நடத்தும்

# தொழில்சார் வழிகாட்டல் பயிற்சிப் பட்டறை

## (Career Counseling Work Shop)

தமிழ் இளைஞர்களிடையே தொழில்சார் உயர்கல்வியை ஊக்கப்படுத்தும் நோக்குடன் கனடா இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் வருடாவருடம் நடத்தும் பயிற்சிப் பட்டறையை எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை தொரொன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபையுடன் இணைந்து நடத்த ஒழுங்குகள் செய்துள்ளது. பாடசாலைகளில் கல்வியை முடிக்கும் மாணவர்களுக்கு கனடாவில் என்னென்ன வளமான தொழில் துறைகள் உண்டென்பதையும், அத்துறைகளின் விவரங்களையும் ஒவ்வொரு மாணவரும் எப்படித் தனது திறமைகளுக்கே ற்ப ஏற்ற துறைகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதையும் இப்பயிற்சிப் பட்டறையில் பங்கு கொள்வதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். மேலும் ஒவ்வொரு துறையிலும் கிடைக்கும் வேலை வாய்ப்புக்கள், வருமானங்கள் பற்றியும் விவரங்கள் கொடுக்கப்படும்.

கனடாவில் கல்வி பயின்று பல்வேறு தொழில் துறைகளில் வெற்றிகரமாக வேலை பார்க்கும் இளைஞர்கள் பலர் இப்பட்டறையில் கலந்து கல்லூரி மாணவர்களுக்குப் பலவித விவரங்களையும் அறிவுரைகளையும் வழங்குவர். அத்துடன் தங்களது கல்வி அனுபவத்துடன் தொழில் பார்க்கும் போது ஏற்பட்ட அனுபவங்ளையும் பகிர்ந்து கொள்வர். அவ்வேளை கல்லூரி மாணவர்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும் கேட்டுத் தெளிந்து கொள்ளலாம். பொறியியலாளர்கள், கணினித்துறை வல்லுனர்கள், கல்வி பயிற்றுனர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிதிச் சேவை வல்லுனர்கள், மருந்தியல் நிபுணர்கள், உடல் நோவுப் பரிகாரிகள், பத்திரிகையாளர்கள், வைத்திய அதிகாரிகள் போன்றோர் இதிற் கலந்து கொள்வர்.

இடம்: வின்ஸ்ரன் சேர்ச்சில் கல்லூரி, 2239 லோரன்ஸ் அவனியு, ஸ்காபரோ
திகதி: நவம்பர் 2, 2002, சனிக்கிழமை
நேரம்: காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை
பிரவேசம், மதிய உணவு: இலவசம்

இடவசதி வரையறுக்கப்பட்டிருப்பதனால் பங்குபெற விரும்பும் மாணவர்கள் தம்மை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். மேலதிக விவரங்களை அறிந்து கொள்வதற்கும் பதிவு செய்வதற்கும் பின்வருவோரை அழையுங்கள்:

தினமும் மாலை 7 மணிக்குப் பின்னர்

- சி.இராமநாதன் - 416 438 2949
- வி. மணிவண்ணன் - 416 609-1998
- ப. கனகரத்தினம் - 416 752-6058
- ச. சிவநாயகமூர்த்தி - 416 267-6712


அலுவலக நேரங்களில் மாத்திரம்

- சி. சிவனேசன் - 416 396-9016


**WINDOW COVERING**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

**BLINDS DRAPERIES AND SHUTTERS**
- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades



இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

FREE ESTIMATE

விபரங்களுக்கு:
என். செல்வம்
416.332.8482
416.419.9247
905.201.7733

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch)
Scarborough, Ont.



**CHANKANAI FLOORING**

* LAMINATE * HARDWOOD * CARPET FLOORING
(PROFESSIONAL INSTALLATION & SALES)



SPECIAL
LIVING ROOM: From $799*
(Wood + Labour)

Carpetஇலிருந்து நிவாரணம் பெற
Laminated Floor Hardwood

Call: Raj 416-918-1624 Thaya 416-830-3929



**வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?**

UNITED
PERSONAL INJURY ASSOCIATES
*The Car Accident People*
ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்க

**கனடாவில் 30 வருடத்திற்கும் மேலான அனுபவம்**

**உங்களுக்குத் தெரியுமா?**
நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் $172,000.00 வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடாகப் பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**
உங்களால் $ 172,000.00 டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

உடல்ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள்
யுனைட்டெட்

பண இழப்பீட்டுத் தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய உடன் தொடர்பு கொள்ளவும்

வீட்டுப்பெண்ணா அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளி மாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெறமுடியும். நீங்கள் சாரதியாக இருந்தாலும் பாதசாரியாக இருந்தாலும் பேருந்தில் பயணிப்பவரானாலும் சைக்கிளில் செல்பவரானாலும் இன்னும் தவறு உங்களுடையதாக இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெறமுடியும்.

**உங்கள் அறியாமையால் வாரத்திற்கு $1000.00 வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்**

**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

தமிழ் உட்பட 25ற்கும் அதிகமான மொழிகளில் சேவை வழங்கப்படுகிறது

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

**தீபன் - (416) 505-9804**

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main Street E., 1st Floor, Hamilton
- 75 Collier St., Unit A, Barrie



# உலகிலேயே இரண்டு விருதுகளை வென்ற கனேடிய பெண்மணி சென்கிளையர்



## விளையாட்டுத் தகவல்கள் - 110

## உதைபந்தாட்டம்

இதுவரை உதைபந்தாட்ட சரித்திரத்தில் கனேடிய நாடு World Cup இறுதியாட்டம் விளையாடியதாக சரித்திரம் இல்லை. அதே வேளையில் பெரும் விருதுகளை கனேடிய வீரன் அல்லது வீராங்கனை வென்றதாக சரித்திரமும் இல்லை. ஆனால் 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி இந்த சரித்திரம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. கனேடிய ஆண்கள் (உதைபந்தாட்டத்தில்) கனவிலும் கண்டிராத ஒரு சதானையை கனேடியப் பெண்கள் நிகழ்த்தி நிருபித்துள்ளார்கள். கனேடிய பெண்களின் வருங்காலம் எதிர்காலத்தில் கட்டியம் கூறுவது போல் இந்த சாதனை அமைந்துள்ளது.

உலக கிண்ணம் பத்தொன்பது வயதுக்குட்பட்டோர் பெண்கள் சுற்றுப் போட்டிகள் இம் முறை Edmonton / Vancouver நகரில் இனிதே நடைபெற்று முடிந்துள்ளன. உலகம் பூராகவும் 20 மில்லியன் பெண்கள் உதைபந்தாட்டம் விளையாடுவதாக கணிக்கப்படுகின்றது. இதில் இறுதிச் சுற்றுக்கு 16 நாடுகளில் இருந்து 216 பெண் உதைபந்தாட்ட வீராங்கனைகள் தெரிவானார்கள். இறுதிச் சுற்றுக்கான இறுதி உலக கிண்ணப் போட்டிகள் ஆகஸ்ட் 17ஆம் திகதி தொடங்கி செப்ரெம்பர் முதலாம் திகதி வரை கனடாவின் FIFA வினால் நடாத்தப்பட்டது. இறுதியாட்டத்தை 47,784 இரகசிர்களும், நேரில் 914,000 தொலைக்காட்சி இரசிகர்கள் தொலைக்காட்சியிலும் கண்டு களித்தனர் என்று கணிப்புகள் கூறுகின்றன.

இன்று பெண்கள் வரிசையில் உலகில் சிறந்த உதைப்பந்தாட்ட வீராங்கனைகள் என்று எடுத்துக் கொண்டால் Christine Sinclair (கனடா), Kate Meshea (அவுஸ்திரேலியா), Daniela (பிரேசில்), Monica Rubio (மெக்சிக்கோ), Chiejine (நைஜீரியா) ஆகியவர்களைக் குறிப்பிடலாம்.

இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்ற அமெரிக்கப் பெண்கள் அணி




இன்று எந்தவொரு விளையாட்டுத்துறையை எடுத்துக் கொண்டாலும் அதில் முதல் இடத்தை பெறவேண்டும் என்பது அமெரிக்கர்களின் நப்பாசை. இதற்கு உறுதுணையாக பெரும் இலட்சக்கணக்கில் விளையாட்டுத்துறைக்குப்

**எஸ். கணேஷ்**

பணம் செலவழிக்கப்படுகின்றது. இதற்கு உதாரணமாக கொரியா, ஜப்பானில் நடைபெற்ற உலகிண்ண போட்டிகளில் அமெரிக்க அணியின் திறமையை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது என்பதை எடுத்துக் காட்டினர். பெண்கள் பிரிவில் அமெரிக்கர்கள் நாங்களே உலகில் சம்பியன்கள் என்பதை கடந்த சில வருடங்களாக நிருபித்து வருகின்றனர். பெண்கள் உதைபந்தாட்டத்தில் பிரேசில், ஜேர்மனி நாடுகள் முன்பு மிகவும் புகழ் பெற்று விளங்கின. ஆனால் தற்போது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் பெண்கள் உலககிண்ண உதைந்தாட்ட போட்டிகளில் கனடாவும், அமெரிக்காவும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகின. மிகவும் திறமையாக விளையாடிய கனேடிய அணி கோல் போடும் அதிர்ஷ்டத்தை பலமுறை



FIFA இன் Best player (Golden Ball) விருது கனேடிய வீராங்கனையான சென்கிளையர்.



அதிகளவு கோல்கள் போட்ட Golden Shoe விருது பெறுவதை இங்கு காணலாம். சென்கிளையர் 10 கோல்களும் Kell (அமெரிக்க) 9 கோல்களும், Lindsay (அமெரிக்கா) 6 கோல்களும் போட்டனர்.

தவறவிட்டது. ஆட்டமும் 0-0 என்ற நிலையில் Over Time (பிரத்தியேகமான நேரத்தில்) அமெரிக்கா 1-0 என்ற கோல் அடிப்படையில் கனடாவை வெற்றி கொண்டு உலககிண்ணப் கோப்பையை சுவீகரித்துக் கொண்டது.

கனடாவின் பெண் உதைபந்தாட்ட வீராங்கனையான Christine Sinclair (சென்கிளையர்) உதைபந்தாட்ட சரித்திரத்தில் முதன் முறையாக ஒரு வீரர் இரண்டு விருதுகளையும் (Golden Ball), (Golden shoe) வென்றெடுத்தார். மிகவும் திறமையான வீரர்க்கு Golden Ball விருதும் அதிகளவு கோல்கள் போட்ட வீரருக்கு Golden shose விருதும் வழங்கப்படும்.

கால்இறுதி ஆட்டத்தில் இருந்து நடைபெற்ற இறுதிப் போட்டிகளை இங்கு பார்ப்போம்.

**Results**

| | | | |
|---|---|---|---|
| Quarter-finals | | | |
| 24.08. | Vancouver | Brazil-Australia | 4-3a.e.t.(3-3,3-1) |
| 25.08. | Victoria | USA-Denmark | 6-0(4-0) |
| 25.08. | Edmonton | Canada-England | 6-2(3-0) |
| 25.08. | Edmonton | Japan-Germany | 1-2a.e.t.(1-1,1-0) |
| Semi-finals | | | |
| 29.08. | Edmonton | Brazil-Canada | 1-1a.e.t.(1-1,0-1) |
| 29.08. | Edmonton | USA-Germany | 3-4 on penalty kicks |
| Play-off off third place | | | |
| 01.09. | Edmonton | Brazil-Germany | 1-1(1-0) |
| | | | 3-4 on penalty kicks |
| Final | | | |
| 01.09. | Edmonton | Canada-USA | 0-1a.e.t. (0-0) |

விருதுகளின் விபரங்களை இங்கு காணலாம்.

**Awards**

Best Players

| | | |
|---|---|---|
| | Christine Sinclair (Canada) | adidas Golden |
| Ball | | |
| | Marta (Brazil) | adidas Silver Ball |
| | Kelly Wilson (USA) | adidas Bronze Ball |

Top Scorers

| | | |
|---|---|---|
| | Christine Sinclair (Canada), 10 goals | adidas Golden |
| Shoe | | |
| | Kelly Wilson (USA), 9 goals | adidas Silver Shoe |
| | Lindsay Tarpley (USA), 6 goals and 2 assists | adidas Bronze |
| Shoe | | |

FIFA fair play Award
Japan


**THE CHILDREN EDUCATION TRUST OF CANADA**

**(CET)**

**சீலன். A**

**416-451-0271**

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறுதொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் வருடத்திற்கு **$400 இலவசம்**

அரச அங்கீகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்புத் திட்டம். (R.E.S.P)



* The Scotia Bank
* The Royal Trust
* Grant Thornton

**TWO YEARS DIPLOMA**ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

இன்னும் பல சலுகைகள் உண்டு

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்

இலவச ஆலோசனைகள் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால் அதனால் பாதிக்கப்படுவர்கள் நமது பேரக் குழந்தைகளே!

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள் * மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

**(416) 245-6555** 2095 Weston Road, Suit 203, Toronto, Ont.
**(416) 755-2801** 2390 Eglinton Ave., E. Suite 223, Scar.

# நிதியும் மூலதனமும்

***வெற்றிகரமாக Stock Market இல் முதலீடு செய்வதற்கான சில வழிவகைகள்***



*கடந்த இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக பங்குச் சந்தையில் (Stock Market) தாக்கம் குறைந்தளவு வட்டி வீதம், பெரிய நிறுவனங்களின் (Company) கணக்கியல் துஷ்ப்பிரயோகம், அவற்றின் கடையடைப்பு (Bankruptcy) யாவும் ஒரு சாதாரண மூலதனம் இடும் (Investor) ஒருவருக்கு ஒரு பதட்டத்தையே ஏற்படுத்தியுள்ளது. அது இயற்கை ஆகும்.

ஆகவே இப்படியான தாக்கத்தை தவிர்க்க சில வழிகளாவன:

1. Diversify Your Holdings:

நீங்கள் முதலீடு செய்யும் போது சமமாக பகிர்ந்து, ஒரே கூடையில் அத்தனை முட்டைகளையும் போடாமல் பகிர்ந்து பல கூடையில் போடுவது நல்லது. என்னவெனில் முதலீடு செய்யும் போது Asset Class, (ex.: Stocks, Gas, Bonds) investment style (fund manager எப்படி வழியை பயன்படுத்துகிறார்.) Sector - (எந்த sector இல் invest பண்ணுகிறோம் Oil, Gas, Finanical, Food) அறிந்து, பகிர்ந்து முதலீடு செய்தால் தாக்கம் மிக குறுகியதாக இருக்கும். ஏனெனில் எவராலுமே குறிப்பாக கூற முடியாது. அந்த நேரத்தில் எந்த sector or asset class நன்றாக இருக்கும் என நாம் அதற்கேற்றவாறு பகிர்ந்திருந்தால் நேரம் வரும் போது நாம் அதை சாதகமாக ஆக்கிக் கொள்ள நேரிடுகிறது.

**** Take A Disciplined Approach:***

நீங்கள் நீண்டகால நோக்கை முன்னிட்டு முதலீடு செய்வீர்களாயின் அதை எக்காரணம் கொண்டும் மாற்றாமல் தொடர்ந்து முதலீடு செய்து கொண்டிருப்பதே ஆகும். ஏனெனில் நீங்கள் எடுத்த முடிவு எவ்வகையான market condition இற்கும் தாக்குப் பிடிக்க கூடியதாக உள்ளதே ஆகும்.

**** Maintain Long Term Focus:***

நீங்கள் எடுத்த முடிவே சரி என கருத்தில் கொண்டு, குறுகிய காலத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்குக் கவனம் செலுத்தாது தொடர்ந்து உங்கள் கவனம் நீண்டகால நோக்கை கருத்தில் கொண்டு சுமுகமாக முதலிடுவதே சிறந்ததாகும்.

**** Review and Rebalance:***

மேலும் நீங்கள் எம் முடிவை எடுத்தாலும் market condition ஐப் பொறுத்தது. சில மூலதனங்கள் கூடுதலாகவும் சில குறைவாகவும்
அதிகரித்து இருக்கும். எனவே ஒரு சில மாதங்களின் பின் நீங்கள் இட்ட முதலீட்டை பார்த்து திரும்பவும் ஒரு மாற்றம் செய்வது சிறந்ததாகும்.

இறுதியாக - கடந்த சில வருடங்களின் முன்பு stock market ஏறிய ஏற்றம் போல திரும்பவும் உடனடியாக வரும் என்றால் அது பொய்யாகும். எனவே இன்னும் சில வருடங்கள் சிறிய சிறிய ஏற்றங்களைக் காணக் கூடியதாக இருக்கும்.

**ஒரு போதும் எந்த ஒரு சிறந்த மூலதனமாக இருந்தாலும் தனி ஒரு மூலதனத்தை நீண்டகாலத்திற்கு அதிக ஏற்றத்தை தரும் என நினைப்பது தவறு.**

முதலீடு செய்யும் போது பகிர்ந்து செய்வதே மிக சிறந்ததாகும். ஒன்று இறங்கியிருந்தாலும் மற்றைய மூலதனம் ஏறி தாக்கத்தை குறைக்கக் கூடியதாகஇருக்கும்.

பொதுவாக கூறின் stocke market இல் முதலீடு செய்வது எல்லோருக்கும் சிறந்ததல்ல. நம்மவர்கள் எனது மைத்துனர் உழைத்தார் stock marketஇல் என்றும் அயலவர் உழைத்தார் stocke markete இல் என்றும், எனது வேலைத்தள முதலாளி உழைத்தார் stock marker இல் என்பதற்காக நானும் ஏன் உழைக்க கூடாத என்று stock market இல் போய், இருந்ததும் இல்லாமல் அழிந்து போனவர்கள் பலர். ஒரு சிலர் உழைத்திருக்கலாம். சரியான நேரத்தில் முதலீடு செய்திருந்தால். ஆனால் எத்தனை தடவை அவர்களின் மூலதனம் குறைந்தது என்பதை அவர்கள் சொல்லமாட்டார்கள் ஏனெனில் வெட்கம்.

எனவே மற்றவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக stocke market இல் இறங்காமல் நன்றாக படித்து ஆராய்ந்து விட்டு முதலிடுவதே சிறந்ததாகும்.

Stock Market இல் இறங்கும் போது ஒரு குறிப்பிட்ட தொகை இருக்கிறது. அதனை முதலிடுவோம்; இதில் ஆதாயம் வந்தால் அல்லது வரா விட்டால் வேறு ஒரு விதமான பாதிப்பும் ஏற்படாது என்ற மனப்பாங்கில் தான் இறங்க வேண்டும். அல்லாவிடில் மனவருத்தத்திற்கு உள்ளாக நேரிடும்.

அதற்கும் பதிலாக mutual fund (சற்று சிறந்தது) அல்லது GIC இல் முதலீடு செய்வது சிறந்ததாகும்.

இறுதியாக எல்லோருக்கும் நன்கு புரிந்த ஆனால் கடைப்பிடிப்பதில் மிக மிக கடினமான (குறிப்பாக வெளிநாட்டில்) பேராசை பெரும் தரித்திரம் ஆகவே முடியும்.

- Jey Ahamparam


என் பணி "கடன்" செய்து கொடுப்பதே

GOOD, BAD OR NO CREDIT*



* வீடு வாங்க அடமானம் • 1st 2nd & 3rd Mortgages
* குறைந்த வட்டி வீதத்தில் புதுப்பித்தல் • Low Rates for Renewals
* வருமானத்தை நிரூபிக்க முடியாத நிலை • Unable to prove income*
* கடன் நிலைப் பிரச்சினை • Credit Rating Problems*
* வீடு திருத்தக் கடன் • Home Renovation Loan
* முதலீட்டுக் கடன் • Investment Loan

* Subject to sufficient equity

N. MURUGADAS
MORTGAGE SPECIALIST

SAVERS MORTGAGE
TAILORED TO FIT YOUR NEEDS

416.543.6614

RES: 905.608.1218 e.mail: mmuruyan@saversmortgage.com

கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்குதல் இனி அவசியமில்லை


விடுகதைகள்

1. தவழ்ந்து வந்தால் தாலாட்டும். இளமை கொண்டால் இதமாகும். முதுமை, எல்லாம் அழித்துவிடும் அது என்ன? — தென்றல், காற்று, புயல்.
2. மழைக்கும் அசையாது எதுமை அல்ல. வெயிலுக்கும் வாடாது மாடு அல்ல. அது என்ன? — வீட்டின் கூரை
3. பாளை போலப் பூப்பூக்கும். பார்த்தவர்க்கு விருப்பூட்டும். தலையிலே சூடாத பூ. தரணிதனில் என்ன பூ? — வாழைப்பூ


EDUCATION FUND SERICES Inc.

The Children's Education Trust of Canada

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!



Siva Kanapathypillai
(Divisional Director)

சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

Tel: 416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-044
Fax: 416-438-8532 Res: 905-472-1139
1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.

முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.

Neelam silk

உயர்தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்
முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்

2002ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

* SONALIKA PURE SILK
* JARDHOSHI SATIN & CREPE SILK
* JAPAN CRYSTAL SILK
* JAIPUR CRYSTAL SILK
* VASUNTHARA NETWORK CREPE

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

நீலம்



சில்க்

☎: 416-778-7455 Fax: 416-778-8484
1453 GERRAD STREET, EAST (INDIAN BAZZAR)
☎: 416-759-2002
2378 EGLINTON AVE.,E, (Kennedy Rd. & Eglinton Ave. Scar.)


# சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து...



## போட்டியில் சிக்கிய அனுதாபம்

போட்டி, போட்டி, எங்கும் போட்டி, எதிலும் போட்டி, எரிச்சலில் போட்டி, புகைச்சலில் போட்டி, உறவுகளுடன் போட்டி, பகைவர்களுடன் போட்டி, சொந்தபுத்தி உள்ளவர்களுடனும் போட்டி, மந்த புத்தி உள்ளவர்களுடனும் போட்டி. என்ன போட்டி இது என்று எண்ணுகிறீர்களா? இது தான் இங்கு வாழ வந்து இருக்கும் அனேகமான ஈழத் தமிழர்களின் வாழ்க்கை முறையோ என்று எண்ணும் அளவிற்கு நிறைந்து காணப்படும் போட்டி வகைகளைத்தான் இங்கு சொல்லலாம் என்று எண்ணுகின்றேன்.

தனி மனித தேவைகளை இயன்றளவில் பூர்த்தி செய்து இன்பமாக வாழ்வது தான் மனித வாழ்க்கை. மனிதருக்கு மனிதர் தேவைகள் வேறுபடும். தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதும்



விடுபடுவதும் ஒவ்வொருவரது வசதியைப் பொறுத்தது. உயிருக்குப் பயந்து தான் ஓடி வந்து பெரும்பான்மையானவர்களது வாழ்க்கை இங்கு தொடர்மாடிக் கட்டடங்களில் ஆரம்பமாகின்றது. அரசாங்கம் கொடுக்கும் ப ச ை ச ை ய

தொடர்ந்து ஏதோ ஒரு வகையில் தொழில் தேடி, கையில் வரும் பணத்தை சீட்டுப் போட்டும், வட்டிக்குக் கொடுத்தும் மூன்று நான்கு வேலை செய்தும் பெருக்க ஆரம்பித்ததும் வந்த நிலை, இருந்த நிலை மறந்து போட்டிகள் ஆரம்பமாகி விடுகின்றன.

போட்டி யாருடன்? இங்கு வருமுன் உதவிய, வந்தபின் உதவிய, உறவுகளுடன் போட்டி, நண்பர்களுடன் போட்டி, தெரிந்தவர்களுடன் போட்டி, தெரியாதவர்களுடன் போட்டி,

போட்டி எப்போது ஆரம்பிக்கின்றது?
அனேகமாக முதல் சீட்டு எடுக்க ஆரம்பிக்கும் போது ஆரம்பித்து கூடிய வட்டிக்கு யார் கொடுக்கிறார்கள் என்ற அடுத்த கட்டத்திற்கு தாவுகிறது. அதிலிருந்து நகை உடைகள் வாங்குவதில் போட்டி, வீடு வாங்குவதில் போட்டி, கார் வாங்குவதில் போட்டி, பிள்ளைகளகளுக்கு Tuition கொடுப்பதில் போட்டி, இந்தியாவிற்கு கொண்டு சென்று படிப்பிப்பதில் போட்டி, கலியாணவீடு செய்வதில் போட்டி, பிறந்த நாள், பூப்புனித நீராட்டு விழாக்களில் போட்டி என்று தொடர்ந்து இறப்பு வீடுகளில் இறந்தவர்களின் cut outகள் வைப்பது வரை போட்டிகள் தொடருகின்றன. அதிலும் அனுதாபம் தெரிவிப்பதில் மரணவீட்டுக்காரரின் தாய் வழியினரா? தந்தை வழியினரா? முன் நிற்கிறார்கள். கூடுதலான அனுதாபம் காட்டுகிறார்கள் யார் என்ற இழிவு நிலைக்கு இறங்கி வந்து விடுகின்றனர். எதற்காக இந்த போட்டிகள் எல்லாம்? மற்றவர்களை விட தான் ஏதோ சாதித்து விட்டதாக தம்மை திருப்திப்படுத்திக் கொள்வதற்காக மட்டும்தான் என்பது மற்றவர்களுக்குத் தெரியாது என்று எண்ணிக் கொள்கிறார்கள். தம்மைப் பற்றி வீணாக தம்பட்டம் அடிக்க எதையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள்.

இதனால் வரும் பின் விளைவுகள் உறவுகளுக்கு இடையிலான மனமுறிவு, பண விரயம், சில வேளைகளில் கடனாளியாகி ஒட்டாண்டிகளாக ஆக்கப்படும் நிலை கூட உருவாகி விடுகின்றது. போட்டி மனப்பான்மையினால் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற மனித நேய செயல்கள் கூட மனங்களில் இருந்து அகன்று விடுகின்றது. ஒருவருக்குச் செய்யும் உதவியினால் கிடைக்கும் மனத் திருப்தியும், உதவி பெறுபவர்களின் உளமார்ந்த வாழ்த்துக்களும் தான் உண்மையான மகிழ்ச்சியை வாழ்க்கையில் எமக்கு பெற்று தரும் என்று அறிவிலிகள் உணரும் காலம் வரை இந்தப் போட்டிகள் தொடரும்.

சிந்தனை தொடரும்

பரம் G. ஒரு சாதாரணமனிதன்


# திருமண சேவை

உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன், மணமகளைத் தெரிவு செய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள். எமது சேவையின் பலனைப்பெற்ற தம்பதிகள் பலர். உலகெங்கும் பரந்து தொடர்புகள் குன்றி வாழும் எம்மவர்களின் தேவையே எமது சேவை.

**416 261-6219**

Email: ratnm51@hotmail.com

WEEKLY AFTER 6:00PM / WEEKENDS ANYTIME





**RASANAYAGAM ANTONYPILLAI, B.Sc. Agr.**

RE/MAX Golden Way Realty Inc.

வீடு விற்க, வாங்க, வாடகைக்கு பெற, பெற்றுக் கொடுக்க அழையுங்கள் - ராஜன் அன்ரனி

Office: 416-299-8199
Home: 416-516-9897
Pager: 416-510-7755

3390 MIDLAND AVE.
UNIT 8, TORONTO, ON.
M1V 5K3







# U.S TAILORS


இதோ **U.S Tailors** மீண்டும் உங்கள் முன் வருகிறார்.

* 5 லயினிங் Blouse தைப்பவர்களிற்கு ஒரு Blouse மட்டும் free.
  (ஆறாவதாக தைக்கப்படும் தொமல் blouse free)
* பஞ்சாபி, சுடிதார், கொஸ்ரீம், பரதநாட்டிய ஆடைகள்
* Jecket, Soota கலர், ஜன்னல் கலர் மற்றும் நீங்கள் விரும்பிய வடிவங்கள்.

தீபாவளி
நத்தார்
தினங்களிற்கான
விசேட சலுகை

அளவெடுத்து இந்திய முறைப்படி தைத்துக் கொடுக்கப்படுகிறது.








அழையுங்கள்: ராஜீ - 416-769-2207

## பொடிப் பயல்கள் வெடி கொளுத்திடும்
# தீபாவளிப் பண்டிகை

தீபாவளிப் பண்டிகை ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி எல்லோரும் கொண்டாடும் பண்டிகையாகும். பெரியவர் சிறியவர் பேதமின்றி எல்லோருக்கும் உரிய பண்டிகை இதுவாகும். தீபாவளி - தீபங்களின் ஆவளி எனப் பொருள்படும். இது தீபங்களின் வரிசை அதாவது விளக்குகளை வரிசையாக ஏற்றி இப்பண்டிகையைக் கொண்டாடு கின்றார்கள். இந்தியாவின் வடபகுதியில் தான் இவ்வாறு செய்கிறார்கள். தென்னாட்டவர் விளக்கு வரிசையைக்



